# வடக்கிலிருந்து யாரும் வந்து தமிழ்நாட்டை வெற்றிகொண்டு ஆள முடியாது!

## – எந்தத் தேர்தல் வந்தாலும் அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றி பெற்று

# தமிழ்நாட்டில் மிகப்பெரிய வரலாற்றைப் படைக்கப் போகிறார் முதலமைச்சர்!

## சட்டப் பேரவையில் – நிதித்துறை மற்றும் சுற்றுச்சூழல் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் – அமைச்சர் தங்கம் தென்னரசு பெருமிதம்!



**சென்னை, ஏப். 30 -**

**சட்டப் பேரவையில் நிதி, ஓய்வூதியங்கள் மற்றும் சுற்றுச் சூழல் மானியக் கோரிக்கை பதிலுரையில் அமைச்சர் தங்கம் தென்னரசு "கரிகால பெருவளத்தானைப் போல எந்தத் தேர்தல் வந்தாலும், அனைத்துத் தேர்தல்களிலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெற்றி பெற்று தமிழ்நாட்டில் மிகப் பெரிய வரலாற்றை படைக்கப் போகிறார்" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

பேரவையில் அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரை வருமாறு:-

தங்கம் தென்னரசு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நிதி, ஓய்வூதியங்கள் மற்றும் சுற்றுச்சூழல் மானியக் கோரிக்கைகள்மீது பதிலுரையை வழங்கக்கூடிய வாய்ப்பினை எனக்கு அளித்திருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், பேரவைத் தலைவரான தங்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், முன் வரிசையில் வீற்றிருக்கிற எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் உள்ளிட்டு இருக்கக்கூடிய முன் வரிசைத் தலைவர்களுக்கும், அமர்ந்திருக்கும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், இங்கே இந்த மானியத்தில் உரையாற்றி இருக்கக்கூடிய எட்டு சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவித்திருக்கக்கூடிய கருத்துகள் ஆகிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தலைவர் கலைஞர் அவர்கள் துயிலும் இடம்நோக்கி தொழுது, எனது பதிலுரையை துவங்க விழைகிறேன்.

நம்முடைய உறுப்பினர் மு. ஜெகன் மூர்த்தி அவர்கள் பேசுகிறபோது அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியை ரூ.250 கோடியாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். தற்போது ரூ.120 கோடி இருக்கிறது. ஏற்கெனவே இந்தத் திட்டம் ஆரம்பிக்கும்போது அது ரூ.100 கோடியாக இருந்தது. Budget estimate 2025-2026 அதற்கு முன்பிருந்தது. இந்த ஆண்டு 2025-2026-ல் Budget estimate-ல் நாங்கள் ரூ.170 கோடியாக அதை உயர்த்தியிருக்கிறோம். இந்த ரூ.170 கோடி என்பது, ரூ.150 கோடி அந்த component-ஐ எடுத்துக்கொண்டீர்கள் என்று சொன்னால், அது Subsidy ஆக வருகிறது. ஏறத்தாழ ரூ.14.56 கோடி Interest subvention ஆக அதில் இருக்கிறது. ரூ.5.46 கோடி என்பது Professional fee என்கிற வகையில் அதன் components அமைந்திருக்கிறது. நீங்கள் குறிப்பிட்டவாறு இந்தத் திட்டம் எந்த அளவிற்கு வெற்றிகரமாக ஒவ்வொருவருக்கும் வரவேற்பு இருக்கிறதோ, அந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறபோது, இந்தத் திட்டத்திற்கு எப்போது நிதி தேவைப்படுகிறதோ, கூடுதலான தேவை ஏற்படுகிறபோதெல்லாம் இந்தத் திட்டத்திற்கு உரிய நிதியினை விடுவிப்பதற்கு நம்முடைய அரசு தயாராக இருக்கிறது என்கிற தகவலை நான் தொடக்கத்திலேயே உங்களிடத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதே கருத்தை நம்முடைய ம. சிந்தனை செல்வன் அவர்களும், அன்றைக்கு பேசுகிறபோது அந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கிறீர்கள், அந்தக் கூட்டத்திலும்கூட நீங்கள் தெரிவித்திருக்கிறீர்கள். எனவே, அதனடிப்படையில் தேவைகள் ஏற்படுகிறபோது அந்தத் திட்டத்திற்கான உரிய நிதி கூடுதலாக வழங்கப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

நிதித் துறையின் மீதான பல்வேறு விவாதங்களுக்கு நான் நிதித் துறையின் பொது விவாதத்திற்கு பதில் அளிக்கும் போதே விளக்கம் அளித்திருக்கிறேன். அவற்றிற்குள் எல்லாம் நான் செல்வதற்கு விரும்பாமல், இந்த இடைப்பட்ட காலத்தில் ஒரு மிகப்பெரிய சிறப்பான செய்தி ஒன்று நமக்கு கிடைத்திருக்கிறது.

**9.69 சதவிகித பொருளாதார வளர்ச்சி!**

2024-2025 ஆம் நிதியாண்டில் ஒட்டுமொத்த இந்தியாவினுடைய வளர்ச்சி சதவிகிதம் 6.5 சதவிகிதமாக இருந்தாலும், தமிழ்நாட்டை பொறுத்தமட்டில் நமது பொருளாதார வளர்ச்சி என்பது 9.69 சதவிகிதமாக வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த வளர்ச்சி என்பது 2024-2025 ஆம் ஆண்டில் இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்து மாநிலங்களின் வளர்ச்சியோடு நாம் ஒப்பிடுகிறபோது, மிக அதிகமான வளர்ச்சியைக் கண்டிருக்கக்கூடிய மாநிலம் நம்முடைய தமிழ்நாடு என்பதை பெருமையோடு இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்திய திருநாட்டினுடைய பரப்பளவில் 4 சதவிகிதம் கொண்டிருக்கிறோம். அதேபோல, இங்கிருக்கக்கூடிய மக்கள் தொகையில் நாம் 6 சதவிகிதம் பெற்றிருக்கிறோம். 4 சதவிகிதம் பரப்பளவிலும், 6 சதவிகிதம் மக்கள்தொகையிலும் கொண்டிருக்கக்கூடிய நாம், இந்தியாவினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு 9.69 சதவிகிதம் நாம் அளித்திருக்கிறோம் என்பதை நாம் நினைவிலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 4 ஆண்டுகளாக பொருளாதார வளர்ச்சி என்பது மிகச் சீராக இருக்கிறது.

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று கொண்டிருக்கக்கூடிய 2021-2022 ஆம் ஆண்டு 7.89 சதவிகிதமாக இருந்த வளர்ச்சி, 2024-2025 ஆம் ஆண்டில் 9.69 சதவிகிதமாக ஒவ்வோர் ஆண்டும் உயர்ந்துகொண்டு வந்திருக்கிறது. இந்த வளர்ச்சியை 2011 ஆம் ஆண்டிலிருந்து கணக்கில் எடுத்துக்கொள்வோம் என்றால், இதுவரை காணப்பட்ட வளர்ச்சியில் இந்த 9.69 சதவிகிதம்தான் மிகப்பெரிய வளர்ச்சியாக இருந்திருக்கிறது.

## தமிழ்நாட்டின் தன்னிகரற்ற முதலமைச்சர் - தனக்கு உவமை இல்லாத் தலைவராகத் திகழ்கிறார்!

(மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு முன்னால், 2017-2018 ஆம் ஆண்டில் 8.59 சதவிகிதமாக ஒரு ஏற்றத்தைக் கண்டது. அதற்கு பிறகு இப்போது 9.69 சதவிகிதமாக இந்த வளர்ச்சி விகிதம் வந்திருக்கிறது. நீடித்த நிலையான ஒரு வளர்ச்சி sustainable economic growth இருக்குமென்றால், முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததைப்போல 2030 ஆம் ஆண்டுக்குள் One Trillion Dollar பொருளாதாரத்தை நாம் நிச்சயமாக எய்த முடியும் என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல இந்தப் பொருளாதார வளர்ச்சியில் மிக முக்கியமான பங்காற்றியிருப்பது சேவைத் துறை என்று சொல்லக்கூடிய service sector. இது, 2024-2025 ஆம் நிதியாண்டில் 12.7 சதவிகிதமான வளர்ச்சியைக் கண்டிருக்கிறது. தேசிய சராசரி என்பது 7.3 சதவிகிதமாக இருக்கிறபோது, நம்முடைய மாநிலத்தினுடைய சேவைத் துறை குறித்த வளர்ச்சி 12.7 சதவிகிதமாக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்க ஒன்று என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த சேவைகள் துறையானது மொத்த மாநில மதிப்பு சேர்க்கையில் Gross State Value Added (GSVA) என்று எடுத்துக்கொண்டால் 54.66 சதவிகிதம் பங்களிக்கிறது. இந்த வளர்ச்சியானது 2011 ஆம் ஆண்டு முதல் பார்த்ததில் இதுவே அதிகமான வளர்ச்சியாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு முந்தைய ஆண்டில் 2023-2024 ஆம் ஆண்டில் இந்த வளர்ச்சி என்பது 9.25 சதவிகிதமாக இருந்த நிலையில், சேவைத் துறையில் மிக முக்கியமான வளர்ச்சியை நாம் கண்டிருக்கிறோம்.

அதேபோல, பல சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே தெரிவிப்பது மூலதனச் செலவுகளுக்கு நாம் என்ன செய்கிறோம் என்பதை அடிக்கடி இந்த மன்றத்திலே நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். 2016-2017 ஆம் ஆண்டு முதல் 2020-2021 வரை கணக்கு எடுத்துக்கொண்டால், 1.24 இலட்சம் கோடி ரூபாயாக இருந்த மூலதனச் செலவுகள் 2021-2022 ஆம் ஆண்டில் கழக ஆட்சி உருவானதற்கு பிறகு இது வரை 2.21 இலட்சம் கோடி ரூபாயாக

## கடந்த ஆண்டுகளில் சீராக இருக்கும் பொருளாதார வளர்ச்சி!

மூலதனச் செலவுகள் உயர்ந்திருக்கிறது என்பதையும் நான் இந்த அவையிலே குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான், இத்தகைய உயரிய வளர்ச்சி விகிதத்தை தொடர்ந்து நாம் பெறுவதற்காக முதலமைச்சர் தலைமையிலாக இருக்கக்கூடிய இந்த அரசு பல்வேறு முயற்சிகளை நாம் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறோம்.

புதிய விமான நிலையங்கள், சென்னையில் இருக்கக்கூடிய விமான நிலையங்களைத் தாண்டி, ஒசூரிலே, இராமேஸ்வரத்திலே வரக்கூடிய விமான நிலையங்களை நாம் செயல்படுத்துவதற்கான அறிவிப்புகள் வந்திருக்கின்றன. ஏற்கெனவே இருக்கக்கூடிய விமான நிலையங்கள் விரிவாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. பாசன வசதி கட்டமைப்புகள் 2 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த நீர்வள மேம்பாட்டு திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இந்த வளர்ச்சியில் மிக முக்கியமான பங்கு எடுக்கக்கூடிய நெடுஞ்சாலைகள் துறைக்கு மிகப்பெரிய அளவிலே நிதி ஒதுக்கீடு செய்து தந்திருக்கிறோம். மின்சாரம் என்றாலும், தொழில் வளர்ச்சியாக இருந்தாலும், தனித்தனி கொள்கைகள் அதற்காக வகுக்கப்பட்டு, தொழில் வளத்திலே நாம் ஒரு மாபெரும் முன்னேற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, Metro Rail திட்டங்கள். சென்னையையும், சென்னையை தாண்டி இருக்கக்கூடிய கோவை, மதுரை போன்ற இடங்களிலும் உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாநிலம் எங்கும் இந்த வளர்ச்சி என்பது சமச்சீர் தன்மையோடு இருக்கக்கூடிய வகையில் எல்லா இடங்களிலும் தொழில் வாய்ப்புகள், வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டுமென்கின்ற வகையில் இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருப்பதைப்போல, ஏறத்தாழ தமிழ்நாடு முழுவதும் 80 ஆயிரம், குறிப்பாக பொருளாதாரத்தில் பின்தங்கி யிருக்கக்கூடிய பகுதிகளில் வேலைவாய்புகளை உருவாக்குவோம் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் தொடர்ச்சியாக சொல்வதைப் போல, பொருளாதார வளர்ச்சி ஒருபுறம் இருந்தாலும், சமூகநீதி கோட்பாடுகளை நாம் காணக்கூடிய வளர்ச்சிதான் சமுதாயத்திற்கான வளர்ச்சி என்கிற வகையில் நம்முடைய முதலமைச்சர் அவர்களின், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், உயர் கல்வியிலே படிக்கின்ற மாணவர்களுக்கு 7.5 சதவிகித இட ஒதுக்கீடு, தமிழ்ப் புதல்வன் திட்டம், அதேபோல, புதுமைப்பெண் திட்டங்கள் ஆகியவற்றை அறிவித்திருக்கிறார்கள்.

பெண்களுக்கான தனித்தனி திட்டங்கள் விடியல் பயணத் திட்டம், அதேபோல, மகளிர் உரிமைத் திட்டம் வந்திருக்கிறது. மருத்துவத் துறையிலே மிகப்பெரும் திட்டங்களை நாம் நிறைவேற்றி இருக்கிறோம். ஆக இது ஒட்டு மொத்தமான திட்டங்கள், ஒட்டுமொத்தமான பொருளாதார வளர்ச்சி. இன்னொரு புறத்திலே ஒட்டுமொத்தமாக inclusive ஆக ஒருங்கிணைக்கப்பட்டு இருக்கக்கூடிய சமுதாய வளர்ச்சி. இது இரண்டும் இணைகிறபோது நாம் One Trillion Dollar பொருளாதாரத்தை அடைகிறபோது தமிழ்நாடு இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலே குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்த ஒரு நிலபரப்பாக நாம் மாறுவோம் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல, ஓய்வூதியங்கள். ஓய்வூதியங்களை பார்ப்பீர்களென்று சொன்னால், தமிழ்நாட்டிலே நாம் இப்போது நம்முடைய அரசு ஊதியம் பெறக்கூடியவர்கள் ஒருபுறம் இருந்தாலும்கூட அரசிலே பணியாற்றி ஓய்வூதியம் பெற்றுக் கொண்டிருப்பவர்களுடைய எண்ணிக்கையை நீங்கள் பார்ப்பீர்களென்று சொன்னால், பெற்றுக்கொண்டிருப்பவர்களுடைய எண்ணிக்கை இப்பொழுது இருக்கக்கூடியவர்கள் 7 இலட்சத்து 11 ஆயிரத்து 981 பேர் இருக்கிறார்கள். ஏறத்தாழ 7,12,000 பேர் நம்மிடத்திலே

ஓய்வூதியதாரர்கள். அதைத்தான் இன்றைக்கு மானியக் கோரிக்கையில் கூட நீங்கள் பார்த்து இருப்பீர்கள். ஏறத்தாழ 46 ஆயிரம் கோடி ரூபாய் இன்றைக்கு நாம் அரசுக்கு இந்த மானியத் தொகையை வழங்குகிறோம் என்று கேட்டால் நமக்கு இருக்கக்கூடிய ஓய்வூதியதாரர்கள். அதிலே குறிப்பிட்டு நான் உங்களுக்குச் சொல்வேன்.

**100 வயதைக் கடந்தவர்கள் 73 பேர்!**

அந்த ஓய்வூதியதாரர்களிலே 100 வயதிற்கு மேலே எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று ஒரு கணக்கினை எடுத்தோம். 73 பேர் 100 வயதிற்கு மேலே இன்றும் இன்னும் இருக்கிறார்கள். அதிலும் நான் குறிப்பாகச் சொல்வேன். நாகப்பட்டினம் மாவட்டத்திலே திரு. கோபாலகிருஷ்ணன் என்பவர் இன்றும் ஓய்வூதியம் பெறுகிறார். அவருடைய வயது 108. 108 வயது அவர் இருக்கிறார். திருமதி ஆரோக்கியமேரி என்பவர் கள்ளக்குறிச்சியிலே திருக்கோவிலூரிலே இருக்கிறார். அவர் 107 வயதிலே இருக்கிறார். திருமதி பாலம்மாள் நெல்லை மாவட்டத்தில், அம்பாசமுத்திரத்தில் இருக்கிறார். அவர் 107 வயதில் இருக்கிறார். நான் மூன்று பேரை எடுத்துச் சொல்லி இருக்கிறேன். இவர்களெல்லாம் நம்முடைய பென்சன்தாரார்கள். இன்னும் இருந்து நம்மையெல்லாம் அவர்கள் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த மன்றத்தில் நாம் அனைவரும் அவர்களுக்கு இன்னும் நீண்ட நெடுங்காலம் நோயற்ற வாழ்வு அவர்கள் வாழ வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) நிதித் துறை அமைச்சர் என்கின்ற முறையில் அவர்கள் அனைவருக்கும் அன்பார்ந்த வாழ்த்துகளை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். 100 வயதையும் தாண்டி இருக்கிறார்கள். ஆமாம் நான் படித்திருக்கிறேன். இராமானுஜர் தான் மதத்தில் புரட்சி செய்த மகான் என்று சொல்லப்பட்ட இராமானுஜர் அவர்கள், அவர்கள்தான் 120 திருநட்சத்திரங்கள் என்று வைணவ சம்பிரதாயத்திலே சொல்வதைப்போல 120 ஆண்டுகள் அவர் வாழ்ந்தார், வைணவ சம்பிரதாயத்தை பரப்பினார் என்று நான் படித்திருக்கிறேன். இங்கு எத்தனைபேர் இராமானுஜரை இங்கே தொட வேண்டுமென்பதையும் நான் என்னுடைய வாழ்த்துகளாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நேரத்தின் அருமை கருதி சுற்றுச்சூழ

## தமிழ்நாடு முழுவதும் பொருளாதாரத்தில் பின் தங்கிய பகுதிகளில் புதிய வேலைவாய்ப்புகள்!

லுக்கு வருகிறேன். இயற்கை வளம் நிறைந்து இருக்கக்கூடிய தமிழ்நாட்டில் நம்முடைய தமிழ்நாட்டிற்கு என்று ஒரு தனி அழகு இருக்கிறது. இந்த திருநாட்டினுடைய தென்முனையில் இந்திய பெருங்கடல் இருக்கிறது. நம்முடைய கிழக்குப் பகுதியிலே வங்கக் கடல் இருக்கிறது. மேற்குப் பகுதியிலே மேற்கு மலைத் தொடர்கள் இருக்கிறது. வடக்கே பார்ப்பீர்களென்று சொன்னால், பாலாறும், ஆரணியும் இருக்கிறது. இப்படி இயற்கை அரண்களாலே சூழப்பட்ட ஒரு எல்லைப் பகுதியைக் கொண்டிருக்கக்கூடிய அருமையான மாநிலம் நம்முடைய தமிழ்நாடு. இதைத்தான் பாரதியார் அழகாகச் சொன்னார். "காவிரி, தென்பெண்ணை, பாலாறு, தமிழ் கண்டதோர் வையை பொருனைநதி என மேவிய ஆறு பல ஓடத் திருமேனி செழித்த தமிழ்நாடு!" என்று பாரதியார் மிக அழகாகச் சொன்னார். அப்படிப்பட்ட இயற்கை அழகைக் கொண்டிருக்கக்கூடியது நம்முடைய தமிழ்நாடு.

**இயற்கை செழிப்போடு இருந்த நாடு!**

அதேபோல, நீங்கள் பார்ப்பீர்களென்று சொன்னால், அன்றைக்கு 2018 ஆம் ஆண்டு மலையாளத்துக் கவிஞர் முஹாத் வெம்பாயம் அவர்கள் ஒரு அருமையான கவிதையை எழுதினார். அது தமிழிலே சாகுல் ஹமீது அவர்கள் மொழிபெயர்த்திருக்கிறார்கள். சுருக்கமாக இதை நான் படிக்க விரும்புகிறேன்.

**"அன்றங்கே ஒரு நாடிருந்ததே; அந் நாட்டில் ஆறிருந்ததே**

**ஆறு நிறைய மீனிருந்ததே; மீனும் முழுகிடக் குளிரிருந்ததே**

**அன்னமிட வயலிருந்ததே; வயல் முழுவதும் கதிருந்ததே**

**கதிர் கொத்திடக் கிளி வந்ததே; கிளிகள் பாடும் பாட்டிருந்ததே**

**அந் நாட்டில் நிழல் இருந்ததே; மண்வழியில் மரம் இருந்ததே**

**நல்ல மழை பெய்திருந்ததே; தின்றது எதுவும் நஞ்சில்லையே"**

என்று மிக அருமையான நீண்டதொரு பாடல். ஆனால், மனதைத் தொட்ட வரிகள் இந்த வரிகள். ஒரு காலத்தில் இந்த பூமி, இந்த நாடு இத்தகைய இயற்கைச் செழிப்போடு, இயற்கை வளங்களோடு திகழ்ந்த காலம் என்று ஒன்று உண்டு. ஆனால், இன்றைக்கு காலநிலை மாற்றம் என்கின்ற பேரிடரை நாம் தற்காலத்தில் சந்தித்து வரக்கூடிய நிலையில் இந்த இயற்கைச் சூழ்நிலைகள் பெரிதும் மாற்றத்தைக் கண்டு தாக்கங்களுக்குள்ளாகி இருக்கிறது. இதிலும், குறிப்பாக தீவுகளும், கடற்கரைகளும் இந்த பாதிப்புக்கு இன்றைக்கு உள்ளாகி இருக்கிறது. ஏறத்தாழ 1,076 கிலோ மீட்டர் நீளம் கொண்டிருக்கக்கூடிய தமிழ்நாட்டினுடைய கடற்கரையானது இந்தியாவினுடைய கடற்கரை பங்கில் ஏறத்தாழ 7-ல் ஒரு பங்கினை நாம் கொண்டிருக்கிறோம்.

இந்தக் கடற்கரையோர மாநிலமாகிய தமிழ்நாட்டிற்கு, காலநிலை மாற்றம் என்பது ஒரு பெரிய சவாலைக் கொண்டுவந்திருக்கிறது. இந்த சவாலின் மிக முக்கியமான பகுதி, பூமியின் வெப்பநிலைக் கூடுகிறபோது, இந்த சவால், சிறிது, சிறிதாக அதிகரித்தும் வருவதை நம்முடைய ஆய்வறிக்கைகள் இன்றைக்கு குறிப்பிட்டுக் காட்டுகின்றன. பனிப்பாறைகள் உருகுகின்றன, கடல் மட்டம் உயர்கிறது, எப்போதும் இல்லாத அளவிலான அதீத மழைப் பொழிவு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது, வருடந்தோறும் வெள்ள நிகழ்வுகள் ஏற்பட்டிருக்கின்றன, அதைத் தொடர்ந்து தொடர் வறட்சி ஏற்படுகிறது. இதுபோன்ற இயற்கைப் பேரிடர்களால், tropical countries ஆன இந்தியா போன்ற வெப்ப நாடுகள் மிக அதிக அளவில் பாதிக்கப்படுகின்றன. எனவே, இவற்றையெல்லாம் சந்திப்பதற்கும், அவற்றைத் தடுப்பதற்கான உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கும் முதலமைச்சர் அவர்கள் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாதவகையில், நம்முடைய மாநிலத்தில், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்காக, 'பசுமைத் தமிழ்நாடு இயக்கம்', 'தமிழ்நாடு ஈரநில இயக்கம்', 'தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்', 'தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம்' என்று 4 மிக முக்கியமான தூண்களாக இந்த இயக்கங்களை உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

அதில், குறிப்பாக தமிழ்நாடு பசுமைக் காலநிலை நிறுவனம் என்கிற Tamil Nadu Green Climate Company என்கிற அமைப்பினை உருவாக்கி, சூழல் அமைப்புகளை மீட்டெடுப்பதற்கும், மீள்திறன்கூடிய வளர்ச்சியை உருவாக்குவதற்கும், நீடித்த நிலையான வன மேலாண்மை போன்ற செயல்பாடுகளுக்கு நிறுவனரீதியான கட்டமைப்புகளை உருவாக்குவதற்கும் அவர்கள் இவற்றை அமைத்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவிக்கக் விரும்புகிறேன். இந்த 4 இயக்கங்களின் மூலமாக, குறிப்பாக பசுமைத் தமிழ்நாடு இயக்கம் மூலமாக, தற்போதுவரை 10.86 கோடி மரக் கன்றுகள் நடப்பட்டதுடன், 75 மரகதப் பூஞ்சோலைகள் உருவாக்கப்பட்டு, இன்றைக்கு தமிழ்நாட்டின் வனப் பரப்பை இன்றைக்கு அரசு 33 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறது.

அதேபோன்று ஈரநில இயக்கத்தின் பெருமுயற்சியினால், 20 Ramsar sites இந்த மாநிலத்தில் இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே அதிக அளவிலான Ramsar தலங்களைக் கொண்டிருக்கின்ற ஒரே மாநிலம், நம்முடைய தமிழ்நாடு என்பதை நான் இங்கு பெருமையோடு சொல்வேன்.

கடல்சார் உயிரினப் பன்மய மேம்பாடு, கடலோரப் பாதுகாப்பு, வாழ்வாதாரங்களை உயர்த்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்காக, தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம், முக்கியத்துவம் வழங்கிவருகிறது.

**தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு!**

தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் மூலமாக காலநிலை உச்சி மாநாடு நடைபெற்றிருக்கிறது. பசுமைக் கரங்கள் திட்டம், கார்பன் செறிவூட்டல் திட்டம், கடலோர வாழ்விடங்களை மறுசீரமைத்தல் போன்ற மிக முக்கியமான திட்டங்களை இந்த அரசு செயல்படுத்திவருகிறது. இவற்றுடன் இணைந்திருக்கக்கூடிய மிக முக்கியமான இரண்டு திட்டங்கள் தமிழ்நாடு முதலமைச்சரின் பசுமைப் புத்தாய்வுத் திட்டத்தின்கீழ் இளைஞர்களை ஊக்குவித்து, அவர்கள் மூலமாக விழிப்புணர்வை ஊக்குவிக்கக்கூடிய இந்தத் திட்டத்தின்மூலம் இந்த முயற்சிகளில், பசுமைத் தோழர்கள் என்று அழைக்கப்படக்கூடிய இளைஞர்கள்மூலம், சிறப்பான பங்களிப்பை ஏற்படுத்தப்பட்டு, ஏறத்தாழ 4.60 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இன்றைக்கு பசுமைப் பள்ளிக்கூடங்கள் உருவாக்கப்பட்டு, பள்ளிகளின் உட்கட்டமைப்புகள் சூழலுக்கு உகந்தமுறையில் மாற்றப்பட்டுள்ளது. அதற்காக ஒரு பள்ளிக்கு ரூ.20 இலட்சம் ரூபாய் என்றவகையில், இதுவரை 197 பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அதிலும் குறிப்பாக, 'மீண்டும் மஞ்சப்பை' இயக்கம் என்ற இயக்கமானது, நான் காலையில் குறிப்பிட்டதைப் போன்று, சுற்றுச்சூழலில் ஏற்படுகின்ற கேடுகளைத் தவிர்ப்பதற்காக, ஒரு முறை மட்டும் பயன்படுத்தித் தூக்கி எறியக்கூடிய ப்ளாஸ்டிக் பொருட்களுக்கு அரசு இன்றைக்கு தடை விதித்திருக்கிறது. அவர்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்த இந்தத் துணிப்பைப் பயன்பாட்டை மீட்டெடுத்து அனைவருக்கும் வழங்கவேண்டுமென்ற முடிவில் இன்றைக்கு 'மஞ்சப் பை' இயக்கத்தை இன்றைக்குத் துவக்கியிருக்கிறார்கள். அதனை ஊக்குவிப்பதற்காக 11 மின் பைக்குகள் சென்னை மாநகரத்தில் Blue Brigade என்று சொல்லக்கூடிய நீலச் சட்டைப் படைகள் நம்முடைய மெரினாவிலும் உருவாக்கப்பட்டிருக்கிறது. பெசன் நகர் நீலாங்கரைக் கடற்கரைப் பகுதிகளில் மஞ்சள் பை kiosks உருவாக்கப்பட்டிருக்கின்றன.

மீனவர்கள் பல இடங்களில் பயன்படுத்தக்கூடிய மீன் வலைகள் அதன் உபயோகத்திற்கு பிறகு, அங்கேயே இருக்கக்கூடிய மீன் வலைகளால் ஏற்படும் மாசினைக் கட்டுப்படுத்தக்கூடியவகையில் TNFI மூலமாக அவர்களுக்கு அந்த மீன் வலைகளிலிருந்து புதிய பொருட்களை உருவாக்கக்கூடியவகையில், மீன் வலை சேகரிப்பு மையங்களை முதலமைச்சர் அவர்கள் காசிமேட்டில், 2024 ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் 14-ம் தேதியன்று திறந்து வைத்திருக்கிறார்கள். இந்த மீன் வலை சேகரிப்பு மையத்தால் 12,744 கிலோகிராம் கைவிடப்பட்ட மீன் வலைகள் சேகரிக்கப்பட்டு, அதற்கு ஈடாக 5.00 இலட்சம் ரூபாய் மீனவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த மீன் வலைகளை மீண்டும் மறு சுழற்சி செய்வதன் மூலமாக கடலோர சுற்றுச் சூழல் பெரும் மேம்பாட்டினைப் பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். அதேபோன்று நாம் பல இடங்களில் பார்க்கிறோம். கழிவுகளைக் கொட்டிவிட்டுச் செல்கிறார்கள் என்று. அவற்றைத் தடுப்பதற்காக பறக்கும் படைகள் ஏற்கெனவே உருவாக்கப்பட்டிருக்கின்றன.

மணலி போன்றிருக்கக்கூடிய இடங்களில் பெரிய தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறக்கூடிய கழிவுகள் எந்தளவிலே போய் இருக்கிறது என்பதை சொல்வதற்கான நிலைமை வந்திருக்கிறது. குறிப்பாக, நம்முடைய மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் S. சதாசிவம் அவர்கள், தொடர்ந்து என்னிடத்திலே அவருடைய பகுதியிலே ஆறு மாசுபடுவதைப் பற்றியும், அதை தடுத்து நிறுத்த வேண்டுமென்று என்னிடத்தில் கேட்டிருக்கிறார். கவன ஈர்ப்புத் தீர்மானமும் கொடுத்திருக்கிறார். ஆக, அப்படிப்பட்ட இடங்களிலே இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கான அந்தப் பணிகளை சுற்றுச்சூழல் வாரியம் செய்துகொடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போல, நான் குறிப்பிட்டதைப்போல, வடசென்னை அருகில் இருக்கும் மணலி, எண்ணூர் மறுசீரமைப்பு மற்றும் புத்துணர்ச்சிக்கான council முதன்முறையாக முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்டு, பசுமைப்படுத்துதல் நீர்நிலை மற்றும் சதுப்பு நில மறுசீரமைப்பு, திடக்கழிவு மேலாண்மை ஆகியவற்றை செய்திருக்கிறார்கள். ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையம் இந்தியாவிலே முதன்முறையாக இந்த மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தினால் அமைக்கப்பட்டு, தொழிற்சாலை களுடைய காற்று மற்றும் நீரினுடைய தரம் நிகழ்நேரத்திலே கவனிக்கக் கூடிய வகையில் நாம் இதை

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்